மார்க்கமே மூச்சாய் முகைதீன் பிச்சை

செ. திவான்

மார்க்கமே மூச்சாய் முகைதீன் பிச்சை

செ.திவான் M.A.,M.Phil.,

நூலாசிரியரின் 127 வது நூல்

தலைப்பு	:	மார்க்கமே மூச்சாய் முகைதீன் பிச்சை
பொருள்	:	வரலாறு
ஆசிரியர்	:	செ.திவான்
பதிப்பு ஆண்டு	:	2020, ஆகஸ்ட்
உரிமை	:	ஆசிரியருக்கே
பக்கங்கள்	:	32
அச்சிட்டோர்	:	குமரேசன், சிவசக்தி ஆர்ட்ஸ், சிவகாசி. செல்: 9443379005
வடிவமைப்பு	:	அப்துல் நசீர், நெல்லை.

ரெகான் சுலைமான் பதிப்பகம்
106F, 4A, திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி- 627002
போன்: 0462-2572665

மார்க்கமே மூச்சாய் முகைதீன் பிச்சை

பூலாங்குடியிருப்பு - நாகூர் பிச்சை

நெல்லை மாவட்டம் நாங்குநேரி தாலுகாவில் நூற்றி இருபது ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட வறட்சியில் ஆடு, மாடுகள் மேய்ச்சலுக்கு வழியின்றி அவைகள் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்திற்கு கொண்டு சென்று காப்பாற்றப்படுகின்றபோது அன்றைய திருவிதாங்கூர் ராஜ்யத்திற்கு உட்பட்ட ஊரான பூலாங்குடியிருப்பில் குடிஅமர்ந்த யாதவ குடும்பங்கள் சில இஸ்லாத்தினை ஏற்றது. அந்த வழிவந்த அசன்ராவுத்தரின் மகன்கள் நாகூர் பிச்சை இராவுத்தர், மஹ்தூம் கனி ராவுத்தர், மகள் நாகூர்பீவி. (இவரது கணவர் ரேஞ்சர் புளியங்குடி முகம்மது உசேன், அந்த காலத்தில் டிஸ்டிரிக் போர்டு மெம்மர் தேர்தலில் போட்டியிட்டவர்) இதில் **நாகூர் பிச்சை** இராவுத்தருக்கும் செங்கோட்டை கோசிக்கண் பண்ணையாரின் மகள் திவான்பீவிக்கும் திருமணம் நடைபெற்றது.

இவர்களின் பிள்ளைகள்.

1. **முஹம்மது ஹசன்** (பர்மாவிற்குச் சென்றவர்)
2. **செய்யது மசூது** (அண்ணனுடன் பர்மாவில் சில காலம் இருந்தவர்)
3. **கனி** 4. **இஸ்மாயில்** 5. **பக்கீர் முகம்மது**

இப்போது ஐவரும் உயிருடன் இல்லை.

விசுவநாதபுரம்

திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலிச் சீமையில் அன்றைய தென்காசி தாலுகா (இன்று செங்கோட்டை தாலுகா) தென்காசி மாவட்டம். பெரிய பிள்ளை வலசை பஞ்சாயத்தைச் சார்ந்த செங்கோட்டை ரயிலடி என்ற தச்சன் குடியிருப்பு என்ற விசுவநாதபுரம்.

பெரிய பிள்ளை வலசை ஊரைச் சேர்ந்தவர்கள் அநேகர் நாடார் இனமக்கள். இந்த ஊர் அடியேனது தாயாருக்கு எப்படிச் சொந்தம்? வரலாற்றைப் பின்னோக்குகிறேன். கி.பி.1899 ஏப்ரலில் சிவகாசியில் இரு பிரிவினருக்குகிடையே மோதல்கள் நடந்தது. கலவரத்தில் ஆயிரக்கணக்கில் வீடுகள் அழிக்கப்பட்டன. பலர் கொல்லப்பட்டனர். 1899 சூன் 6இல் சிவகாசியில் பெரிய கலவரம் நடந்தது. அந்தக் கலவரம் தெற்குச் சீமை முழுவதும் பரவியது. அப்போது தென்காசி

செங்கோட்டைப் பகுதியில் நூற்றுக்கணக்கான நாடார்கள் இஸ்லாமிய மார்க்கத்திற்கு மதம் மாறினர் என்று மெட்ராஸ் மெயில் இதழ் 21.7.1899ல் எழுதியது. (மேற்கோள் டாக்டர் ஹார்டுவேல், தமிழாக்கம் எஸ்.டி.ஜெயபாண்டியன், தமிழக நாடார் வரலாறு, தூத்துக்குடி 1979, பக்கம் 174 The Nadars of Tamil Nadu, Robert L.Hardgrave. JR, Bombay, 1969, Page 117. From the Tenkasi, Shencottah region, the special correspondent of the madras mail, Covering the riots, wrote that hundred of shanars are being converted to Islamism.... madras mail July, 21, 1899)

பண்பொழி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட *அந்தக் கலவர வேளையில் பெரிய பிள்ளைவலசையில் எட்டு வீடுகள் தாக்கப்பட்டன.* .... eight houses of Periapillai valassai of ponpulli station limit were subjected to the looting (S.C. Nos 20-24, OC Nos 142, 149, Dr. B. Sobhanan, Temple Entry Movement and the sivakasi Riots Madurai, 1985, page 59)

1899 இல் இந்துக்களில் நடைபெற்ற இருபிரிவினருக்குகிடையே நடைபெற்ற கலவரத்தின்போது பெரியபிள்ளை வலசை கிராமத்தை சேர்ந்த நாடார் குடும்பங்கள் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டது. பெரியபிள்ளை வலசையிலிருந்து ஒரு கி.மீ. தூரமுள்ள தச்சன்குடியிருப்பு என்ற விசுவநாதபுரத்திற்கு இடம் பெயர்ந்தது அந்தக் குடும்பத்தில் நான்கு பெண் மக்கள், ஒருவர் ஆண்.

காசினம்மாள் பீவி

முகம்மது இஸ்மாயில் இராவுத்தர், முகம்மது ஹசன் மீரான் கான் சாகிபு வழியில் வந்தவர் முகம்மது இராவுத்தர். இவரது முதல் மனைவி இறந்தபின் இரண்டாவதாக திருமணம் செய்து கொள்கிறார். அவரது துணைவியாருடன் பிறந்தவர்கள் காட்டுபாவா இராவுத்தர். ரஹ்மாள் பீவி. காட்டுபாவா இராவுத்தர் – சாராள் பீவி தம்பதியருக்குப் பிறந்தவர்கள் ஐந்து பெண்மக்கள், இரண்டு ஆண் மக்கள். இந்த ஐந்து பெண் மக்களில் கடைசிக் குழந்தை காசினம்மாள் பீவி.

சொல்லி முடிக்கப்படாத சுயசரிதை

நாகூர் பிச்சை இராவுத்தரின் மகனான செய்யது மசூதுக்கும் காசினம்மாள் பீவிக்கும் 1950களில் திருமணம் நடைபெற்றது.

இதே செய்யது மகூதுவின் சொல்லி முடிக்கப்படாத சுயசரிதை.

N.செய்யது மகூது

செங்கோட்டை கஸ்ப்பி

பூலாங்குடியிருப்பு

என் வாழ்க்கை வரலாறு

வயது __________ 1

வயது __________ 2

வயது __________ 3

வயது __________ 4

4 வயதில் நான் பார்க்க வேண்டிய சோலி காலையில் எழுந்த உடன் என்னுடைய தாயார் சேலையை பல துண்டுகளாக கிளிந்து இருக்கும் அந்த துண்டை உடிது** கொண்டு - சட்டை கிடையாது. 1- கூடை என் கையில் தருவார்கள். அதை எடுதுக்கொண்டு மாண்டு*** சாணி பல இடங்களிலும் போய் குடையை**** நிரப்பிக் கொண்டு வருவேன். உடனே அதை என் தாயர் இடம் போய் குடை நிரைய மாண்டு சாணி கொண்டு வந்துவிட்டேன் என்று சொல்லுவேன் உட்னே எனக்கு சோழ***** சோறு உப்பு, வத்தல், வெங்காயம். இதை வைத்து சாப்பிடுவேன். உடனே நான் உடித்து இருக்கும் அதே துணியை உடிது கொண்டு பள்ளிக்கூடம் போவேன். இதே போல் படிப்பை முடிது விட்டு சிலேடும் கிடையாது, புத்தகமும் கிடையாது, குச்சியும் கிடையாது. சாய்காலம் 1- கூடை சாணி எடுது கொண்டு வந்து என் தாயாரிடம் காணிப்பேன் உடனே எனகு சோழ சோறும் புளி துவையல் அல்லது காணம் இதை அரைத்துத்தருவார்கள்.*

---

* *சோலி - வேலை*

***உடிது - உடுத்தி*

*** *மாண்டு - மாடு*

*****குடையை - கூடை*

******சோழ சோறு - நவதானியங்களில் ஒன்றான சோளச்சோறு*

என் தந்தையின் கையெழுத்துப் பிரதி அப்படியே ஸ்கேன் செய்து...

N-செய்யது பக்கீர்
செங்கோட்டைகல்ப்ப
பூலாங்கெழிருப்பு
என் வாழ்க்கை வரலாறு

வயது ———— 1
வயது ———— 2
வயது ———— 3
வயது ———— 4

4 வயதில் நான் பார்க்க வேண்டிய
வேலை காலையில் எழுந்த உடன் என்னு
டைதாயார் சேலையை பல துண்டுகளா
க கிழித்து [illegible] அந்த துண்டை
உடுத்து கொண்டு - சட்டை கிடையாது
1-கூடை என் கையில் தருவார்கள்
அதை எடுத்துக்கொண்டு மாண்டு.சாணி
பல இடங்களிலும் போய் கூடையை
நிரப்பகொண்டு வருவேன் உடனே
அதை என் தாயார் இடம் போய் கூடை
நிறைய மாண்டு சாணி கொண்டு
வந்து விட்டேன் என்று சொல்வேன்

வயது 5 ___ படிப்பு 2

இதே சோலிதான்

வயது 6 ----- படிப்பு 3

இதே சோலி தான்

வயது 7 படிப்பு 4

இதே சோலிதான்

வயது ______8

காட்டில் போய் விரகு (விறகு) எடுதுக் கொண்டு வந்து எங்காய்வது போய் விற்க வேண்டும். அதர்கு கூலி எனக்கு கிடைக்கும். 192 பைசா 1ரூ அதில் எனகு என்ன கூலி கிடைக்கும் ....9 பைஸா தான் என் சுமைக்கு கிடைக்கும். இதில் 1 பைஸா எடுக்க கூடாது. அப்படி எடுத்தால் எனக்கு அந்த சோழ சோறு தர மாட்டார்கள். வீட்டுக்கு தண்ணி எடுக்க வேண்டும் சோத்துக்கு* சோளம் இடிக்க வேண்டும். தோசைக்கு மாவு ஆட்ட வேண்டும். நெல்குத்த** வேண்டும். தண்ணீர் எடுக்க வேண்டும்.

வயது ______10

பெண்கள்கூட போய் வேலியில் கத்தாளை*** கொண்டு வந்து அதை மரளாக இழைத்து அதை விற்க வேண்டும். அதில் எனகு கிடைக்கும் கூலி 10– பைஸா

அதில் 1–பைஸாகூட எடுக்கக் கூடாது எடுத்தால் எனகு சாப்பாடு கிடையாது அந்த இரவு வீட்டுக்கு வரமாட்டேன். வீட்டு வேலையும் சரியாக பார்க்க வேண்டும்.

வயது _____ 11

* சோத்துக்கு – சாப்பாட்டிற்கு

** நெல் குத்த – அந்த காலத்தில் அரிசி அரவை ஆலைகள் இராது. நெல்லை அவித்து, காய வைத்து உரலில் குத்தி அரிசியாக்க வேண்டும்.

*** கத்தாளை – கற்றாழை கோரம் பாய் நெய்வதற்கு பயன்படுத்தப்பட்ட கயிறு இதிலிருந்து தயாரிக்கப்பட்டது. தற்போது பெரும்பாலும் நூல்களே பயன்படுத்தப்படுகிறது.

நான் காட்டு வேலைக்கு போய் சோலி செய்வேன் என்ன சோலி. மாட்டு பட்டை கொன்னம் பட்டை. வயணபட்டை.

காலையில் ஐந்து மணிக்கு எழுந்து வீட்டில் போய் 1–துணியில் மத்தியான சாப்பாடுக்கு சோழ சோறும் சில வகை துவயலும் அரைத்து அந்த துணியில் கெட்டி சாக்கும் அறுவாலும் (அரிவாள்) அந்த பட்டை அடிக்க சுத்தியலும் எடுத்து எல்லாவற்றையும் சாக்கில் கெட்டி வைத்துவிட்டு நான் சாப்பிடுவேன். சோளசோத்தை கட்டியாக வைத்து வெங்காயத்தைக் கடித்து கொண்டு சாப்பிட்டு விட்டு மற்ற ஆள்களோடு சோலிக்குப் போவேன். நாங்கள் போகும் காடு **தெப்பக்குளம் ராஜகாடு கருப்பங்கோவில் முனியாண்டி கோவில் சிரட்டப்புள்ளையார் கோவில் ஊஞ்சமெத்து குற்றாலம்**.இந்த காட்டுக்கு இரண்டு போற் அல்லது மூன்று பேறு ஆளுக்கு ஒரு பக்கம் போவோம். போய் நான் இந்த வயதில் தனியாக மரம் பாலு அந்த மரத்தில் தரையிலிருந்து ஏணி கெட்டி பட்டை அடிப்பேன் காட்டுக்குள் பல சங்கடங்கள் வரும் எனக்கு என் சுமைக்கு பட்டையை அள்ளி சாக்கில் கெட்டுவேன். நடுகாட்டில் தண்ணி இருக்கும் இடத்தில் சோறு இருக்கும் சுமயை இரக்கி வைத்துவிட்டு நாங்கள் சாப்பிடுவோம். சுமயை வண்டிவரகூடிய இடத்தில் றாத்தலை* போட்டு தூக்குவோம் 50 றாத்தலுக்கு 36 பைசா. நான் இவ்வளவு தான் எனக்கு சுமக்க முடியும்.

1– வாரம் – 6 – நாள் வேலை

1 வாரத்துக்கும் 1– ரூ – 24 பைஸா

நான் பீடி குடிக்க மாட்டேன். வெற்றிலை பாக்கு போட மாட்டேன். சாயா பலகாரம் எனக்கு எப்படி இருக்கும் என்று தெரியாது. அந்த ரூபாயில் 6– பக்கா (1 பக்கா – 2 லிட்டர்) அரிசி – முக்கால் ரூபாய் – கால் ரூபாய்க்கு மசாலா காய்கறி உப்பு எண்ணை மீதமுள்ள 24 பைஸா ___ இரண்டு அணா அதை என் தகப்பனார் கையில் கொண்டு போய் கொடுப்பேன். நான் வாரம் வாரம் கொண்டு போய் கொடுப்பேன் அப்படி கொடுக்கவிட்டால் என்னை பிடித்துக் கொண்டு போய் என்

* றாத்தல் – ஓர் அளவு; 60 கிராம்

தகப்பனார் கண்டபடி அடிப்பார். - வயது 12- 13- 14 -15 இதே சோலி தான். 15 வயதுகு மேல் என்னை என் தகப்பனார் பர்மாவுக்கு* போக சொன்னார் நான் ரொம்ப சந்தோஸமாக சில பேர்கள் உடன் புரப்பட்டேன். 15 வயதில் எனக்கு என் தகப்பனார் சுன்னத் செய்து வைத்தார்.

செங்கோட்டை X மெட்றஸ் ரூ - 7------ அணா- 10
கப்பலுக்கு ரூ. 20 ----- மட்டும்**

பர்மா போய் என் அண்ணனிடம் போய் சேர்ந்தேன். அவ்வளவு தான். உடனே அங்கு யுத்தம் ஆரம்பமானது.*** இரண்டு மாசம் அங்கு இருந்தேன். பயங்கர சண்டை நடந்தது. அதில் நானும் என் அண்ணனும் தப்பி நம் பிறந்த ஊருக்கு இந்தியாவுக்கு போக வேண்டும் என்று தீர்மானித்தோம். நாங்கள் இரண்டு பேறும் மற்றும் சில பேர்களும் சேர்ந்து ஊருக்கு திரும்பினோம்.

---

* பர்மா - பர்மா தேசம் தற்போது மியான்மர், தமிழர்கள் சிலர் பிழைப்பிற்காக அங்கு சென்றார்கள்.

** அந்தக் காலத்தில் ரயில், கப்பல் கட்டணம் இவ்வளவு தான்.

*** இரண்டாம் உலகப்போர் ஆரம்பமாயிற்று (1939-1945) இரண்டாவது உலகப்போர் பற்றிய விவரம் அறிய மேஜர் ஜெனரல் மத்சுலேங்கா எழுதிய இரண்டாம் உலக யுத்தம், முன்னேற்றம் பதிப்பகம், மாஸ்கோ, 1986, பக்கங்கள் 527

World War II Decisive Battles of the soviet Army V.Larrionor N.Yeronin, B.Solovyou, V.Timokhovich ஆகியோர் எழுதிய ஆங்கில நூல் 1984, மாஸ்கோ பக்கங்கள் 527.

தி.சு.விசுவனாதன் மானேஜிங்ப்ரொப்ரைட்டர் சுதேசமித்திரன் ஆபீஸ் எழுதிய ஐரோப்பிய யுத்த சரித்திரம் 24 பக்கங்கள். ஏ.ஜி.வெங்கடாச்சாரி எழுதிய 1914-1939 ஹிட்லரும் மகாயுத்தமும் ரோம் - பெர்லின் வெற்றி மெயில் சென்னை, 1939, 401 பக்கங்கள்.

Winston S.Chruchill, The Second Wolrd war, London, Vol I, 1954, 641 பக்கங்கள் வால்யூம் II 1949, 592 பக்கங்கள். எஸ்.கேசவலு, இரண்டாம் உலக யுத்தம் ஒரு படிப்பினை 251 பக்கங்களை கொண்ட நூல், A.P.J.Tayour The Illustrated History The World war 480 பக்கங்கள் நூல்களையும் இதர ஐரோப்பிய வரலாறு உலக வரலாறு நூல்களையும் வாசித்து கொள்ள வேண்டுகிறேன்

ரெங்கோன் அதிலிருந்து புரோமுக்கு 1– லாரியில் வந்து சேர்ந்தோம். அங்கு இருந்து பெரிய நதியைக் கடக்க வேண்டும் 1 – தோணியில் கடந்து வந்து ஐராவதி – ஆறு பட்டான் என்ற நகரம் இருக்கிறது. அங்கு தங்கி இருந்தோம். அதிலிருந்து மலை – 110 மைல் நடக்க வேண்டும். மாலையில் தண்ணீர் கிடையாது, சாப்பாடு கிடையாது. நாங்கள் 1 வண்டி – மாடு. இதை கின்றதுக்கு வாங்கி அதில் 15 – பாட்டை தண்ணீர், மைதா மாவு , சீனி – அவல் பால் பவுடர் தேயில ரவை – எண்ணை எல்லாவற்றையும் அந்த வண்டியில் ஏற்றி பிரயாணம் செய்தோம்.

1 நாள் 12 – மைல் – 2 நாள் 10

3– நாள் 10 – நான்காவது நாள் 15

ஆக 47 மைல்கள் மாலை ஏரினோம். சோறு கிடையாது. காப்பி அவல் ரவை. இது தான். தண்ணி – 5 X பாட்டை காலியாகிவிட்டது. இன்னும் 63 மையில் கடக்க வேண்டும். இதர்க்கிடையில் அந்த வழியில் பல்லாயிரக்கணக்கான பிணக்குவியல் கிடகும். அதையும் நாங்கள் பொருள்படுத்தாமல் மறுபடியும் பயணத்தை தெடங்கினோம். 47 மைலும் பெரிய மலையும் ஏத்தமாக இருந்தது. அதற்கு பிரகு இரக்கம் மான ரோடு. அதில் 5ந்தாவது நாள் 15 மைல்

6வது நாள் 17 மைல்

7வது நாள் 20 மைல்

8வது நாள் டாங்காப் என்ற ஊரைக் கண்டோம். கடலையும் கண்டோம். அங்கு தங்கி குளித்து சோறு கறியாக்கி சாப்பிட்டோம்.

அங்கு இருந்து அருக்கான் என்ற ஊருக்கு போக வேண்டும். அங்கிருந்து 7 – நாளில் 1 தோணியில் ஏரி அருக்கான் போய் சேர்ந்தோம். அங்கு இருந்து கப்பலில் ஏரி சட்டிகாம் வந்து சேர்தோம்.* இந்தியா கல்கத்தா மெட்ராஸ் செங்கோட்டை பூலாங்குடியிருப்பு சொந்த ஊர் வந்து சேர்ந்தோம். 1– வாரம்

* வெ.சாமிநாதசர்மாவின் எனது பர்மா வழி நடைப்பயணம் நூலில் பர்மாவிலிருந்து போரின் போது வந்தவர்கள் பட்ட அவதியை விரிவாக விவரித்துள்ளார்.

விட்டில் இருந்தேன். அதிலிருந்து சோலிக்கிபோக என தகப்பனார் தயார் என் அண்ணன் மூன்று பேறும் சொன்னார்கள். உடனே நான் வேலைக்குப் போகத் தீர்மானித்தேன். வீட்டுக்கு ரூ 10 கொடுத்து விட்டு வேலைக்குப் போனேன். முதலாவதாக நான் போன ஊர் **கல்லிடைகுறிச்சி மலை, மாஞ்சோலை.** 1– மாதம் அங்கு இருந்தேன். பிரகு ஊர் வந்து சேர்ந்தேன்.

அதர்கு பிரகு வீட்டுக்கு 10ரூ கொடுத்து விட்டு வேலைக்கு போனேன். **கண்டம்பாரை மலை கிடவெட்டிப்பாரை கண்ணிகட்டி மலைவாணக் காடுமலை சாமியார் தோட்டம் – நாதலாபதி அகஸ்தியார்கூட மலை, காரையாறு – கவுதலை சம்பன்குளம் கோதையாறு கோத்தநாயர் கோவில் முண்டந்துரை சொரிமுத்தம்மன் கோவில் பல மலைகளிலும் வேலை பார்த்து ஊருகு வருவேன் உம்மியாறு X வண்டல் லோடை கல்லாறு ருக்கோடு – சங்கிலி அம்பறாடு அச்சன் கோவில் கோனி – ரூளி பத்தனாபுரம் அங்கும் போய் வேலைபார்பேன் அதர்க்கு பிரகு பொன்முடி – குளச்சிகரை – பனையன்பொன்முடி** அங்கும் மலையில் தங்கி இருந்து வேலைபார்ப்பேன்.

அதர்கு பிறகு ரயில் வேலை 3 வருஸம் காங்கு கூலியாக பார்த்தேன் சம்பளம் மாசம் 1க்கு ரூ 17, 10 அணா மாசம் மாசம் அந்த ரூபாயில் எனகு 1– ரூபாய் கூட கொரையாமல் என் தகப்பனாரிடம் கொடுப்பேன். 25 வயதில் எனகு கல்யாணம் ஆனது. அதர்கு பிரகு சில வியாபாரம் செய்தேன்.

பாடர்ரில் (பிரானூர் பார்டர்) உறமுடை சுமந்தேன். சேட்டுமெல்லில் (மரம் அறுக்கும் சாமில்) சோலிபார்த்தேன். சில சமயம் கூலி வேலைகும் போவேன். நாஸர் பிரந்த வீட்டிலிருந்து என்னுடைய கஸ்டம் அளவே கிடையாது. கடைசியாக இபுறாகிம் பிறந்தான்.

நான் அன்றிலி இருந்து இது வரையிலும் என்னுடை சாமர்த்தால் ரெம்ப கஸ்டப்பட்டு குடும்பத்தை களித்தேன். **இதோடு சொல்லி முடிக்கப்படாத சுயசரிதை முடிந்து விட்டது. இனி எளியேனின் பின்னுரை எனது தந்தையாருக்கு ஆறு ஆண் மக்கள். இரண்டு பெண் மக்கள்.**

அசன் ராவுத்தர் *(முதல் தலைமுறை)*

↓

நாகூர் பிச்சை ராவுத்தர் – திவான்பீவி *(இரண்டாம் தலைமுறை)*

↓

ஐந்து ஆண் மக்கள்

↓

இதில் ஒருவர் நா. செய்யது மசூது

நா.செய்யது மசூது – காசினம்மாள் பீவி தம்பதியருக்கு

(மூன்றாம் தலைமுறை)

↓

6 ஆண் மக்கள் – இரு பெண் மக்கள்

(நான்காம் தலைமுறை)

↓	↓
மர்ஹூம் **செ.முகைதீன் பிச்சை**	**செ.சீனத்து**
செ.திவான்	**செ.லத்திப்பா**
செ.நாசர்	
மர்ஹூம் **செ.இஸ்மாயில்**	
செ.ஹசன்	
செ.இப்ராஹிம்	



எனது தந்தையார் அவரே எழுதி வைத்த சொல்லி முடிக்கப்படாத சுயசரிதையை விரிவாக எழுதிட வேண்டிய காலம் வரும். எளியேன் வாழ்வின் நிகழ்வுகளையும் பதிவு செய்யப்பட வேண்டிய தருணமும் வந்தால், அப்போது இறைவன் அருளினால் அவைகளைப் பதிவு செய்வேன் என்று 2016இல் சொன்னேன். அந்த வரலாற்றின் தொடர்ச்சியாக ஒரு பகுதி மீண்டும் இதோ:

பூலாங்குடியிருப்பு - பூலுடையார் குடியிருப்பு

இன்றைய தென்காசி மாவட்டம், செங்கோட்டை வட்டத்தில் பூலாங்குடியிருப்பு என்ற ஊர் பூலுடையார் குடியிருப்பு (கரையாளர்) (யாதவர்) என்ற ஊர் என்பது தான் நாளடைவில் பூலாங் குடியிருப்பாகமாறிற்று) இங்கு வாழ்ந்து வந்த நா.செய்யது மசூது - காசினம்மாள் தம்பதியருக்கு அடுத்தடுத்து இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்து மறைந்தன. சோகத்தில் ஆழ்ந்தனர்.

மூன்றாவது மகன்

மூன்றாவதாக அழகிய ஆண் குழந்தை பிறந்தது. முதல் இரு குழந்தைகள் பிறந்ததும் இறந்ததால் இந்த குழந்தையை 'இறைவா நீ காப்பாற்று' என்று வேண்டிக்கொண்டனர். மேற்குத் தொடர்ச்சி மலைக்காடுகளில் மரங்களின் சில மருத்துவப்பட்டைகளைக் கொண்டு வருதல் நா.செய்யது மசூதுவின் பணி. நெல்லை வாங்கி அவித்து காயவைத்து, ஓரிரு சம்பள ஆட்களை வைத்து அதனை உரலில் குத்தி எடுத்து அரிசியாக விற்பனை செய்யும்பணி அவரது மனைவி காசினம்மாளுக்கு.

பொட்டல்புதூர்

மிகவும் நடுத்தரக்குடும்பம். மூன்றாவது ஆண் குழந்தை பிறந்த மகிழ்ச்சி; முந்தைய இரு மகன்கள் மறைந்ததால் மூன்றாவது பிள்ளையை கணவனும் மனைவியும் மார்போடு வாரி எடுத்துக்கொண்டு பொட்டல்புதூர் சென்றார்கள்.

ஹெச்.ஆர். பேட்

1917இல் ஹெச்.ஆர். பேட் ஐ.சி.எஸ். திருநெல்வேலி மாவட்ட கெஜட்டியரை 5 ரூபாய் விலையில் 529 பக்கங்களில் வெளியிட்டார். அதில் பக்கம் 360இல் அம்பாசமுத்திரம் தாலுகா பொட்டல்புதூர் பற்றி முக்கால் பக்கம் எழுதியுள்ளார். அங்குள்ள தர்கா (இறைநேசர் நினைவிடம்) கி.பி.1674இல் கட்டப்பட்டது என்ற தகவலைத் தந்துள்ளார்.

டாக்டர் கே.எஸ்.கே. வேல்மணி

2002இல் திருநெல்வேலி மாவட்ட வரலாற்றை முதல் தொகுதி 704 பக்கங்கள், இரண்டாவது தொகுதி 705 முதல்

1451 வரை வெளியிட்டவர் எனது பிரியத்திற்குரிய நண்பர் டாக்டர் கே.எஸ்.கே. வேல்மணி. இரண்டாவது தொகுதியில் 1400வது பக்கத்திற்கு அடுத்து முழுப்பக்கத்தில் பொட்டல்புதூர் தர்ஹா வண்ணப்படத்துடன் வந்துள்ளது.

அந்த நூலில் 1399, 1400வது பக்கங்களில் பொட்டல்புதூரின் சிறப்பையும், இந்து – முஸ்லிம் – கிறிஸ்தவர்கள் அங்கு வந்து செல்லும் சிறப்பையும் விவரித்துள்ளனர்.

ஃபக்கீர்கள்

இஸ்லாமியப் பக்கீர்கள் 'தப்' அடித்து இறைவன் புகழ்பாடியும், இறைநேசர்கள் புகழ்பாடியும் அன்பளிப்பு பெற்று இன்றும் வாழ்ந்து வருகிறார்கள். இஸ்லாமியத் தளத்தில் நின்று முந்தைய வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் ஏழ்மையும் எளிமையும் நிறைந்தவர்கள் ஃபக்கீர்கள். எழுத்தறிவில்லாத இஸ்லாமியப் பெண்மக்களுக்கு சமயக் கல்வியை தங்களது பாடல்களில் எடுத்துரைப்பவர்கள் ஃபக்கீர்கள். ஃபக்கீர் என்ற பாரசீகச் சொல்லிற்கு தமிழில் இரப்பவர் அல்லது இரவலர் என்று பொருள்.

ஃபகீர் என்ற மூலத்திலிருந்து ஃபக்கீர் என்ற பாரசீகச் சொல் பிறந்தது. பகீர் என்றால் எல்லாத் தேவைகளுக்கும் இறைவனை எதிர்பார்க்கும் தன்மை என்றும், ஃபக்கீர் என்றால் எல்லா தேவைகளுக்கும் எதிர்பார்ப்பவர் என்றும், இந்தத் தேவை ஆன்மீகத்தேவையையும், உலகத் தேவையையும் குறிக்கும் என்று குறிப்பிடுவர். தர்வேஷ் என்ற பாரசீகச் சொல்; 'தர்' என்ற மூலத்திலிருந்து வந்தது. வாசல் என்ற பொருள்படும். அதாவது வாசலுக்கு வாசல்போகிறவர் என்பதால் ஃபக்கீர் என்று அழைக்கப்பட்டனர். (வ.ரஹ்மத்துல்லா, இஸ்லாமிய ஃபக்கீர்கள், சென்னை, 2007, பக்கம் 17,18) ஏ.கே. இராசனின் தென்னகமும் பக்கீர்களும் 110 பக்கங்களைக் கொண்ட நூலினையும் வாசித்தறியலாம்)

ஃபக்கீரிடமிருந்து பிச்சையாக

நா. செய்யது மசூது – காசினம்மாள் தம்பதியர் பூலாங்குடியிருப்பில் பிறந்த தங்களது ஆண் குழந்தையைத் தூக்கிக் கொண்டு பொட்டல்புதூர் தர்ஹா சென்றார்கள். அங்கு

இறைவனின் புகழ்பாடிடும் ஒரு ஃபக்கீரிடம் பிள்ளையைத் தந்தார்கள். பின் அவரிடமிருந்து சிறு தொகையைக் கொடுத்து பிள்ளையை பிச்சையாகப் பெற்றார்கள்.

பொட்டல்புதூர் அமைந்துள்ள தர்ஹா முகையதீன் ஆண்டவர் தர்ஹா. எனவே பிறந்த பிள்ளையைப் பிச்சையாகப் பெற்றதாலும், அவரது தந்தையார் பெயர் நாகூர் பிச்சை என்பதாலும் அதிலுள்ள பிச்சை என்பதனையும் நினைவு கூறும் வகையில் முகைதீன் பிச்சை என்று பெயர் சூட்டினார்கள்.



பொட்டல்புதூர் தர்கா





முகைதீன்

முகியித்தீன் என்ற சொல்லே முகைதீன் என்று மருவிற்று. தீன் என்றால் இறைநெறி, முகியித்தீன் என்றால் இஸ்லாத்திற்குப் புத்துயிரூட்டியவர் என்று பொருள். (குத்புநாயகம், முகியித்தீன்புராணம் புலவர் நாயகம் செய்குஅப்துல்காதிர் நயினார் லெப்பை ஆலிம் (சேகுனாப்புலவர்) இயற்றியது பதிப்பாசிரியர் பேராசிரியர் மு. அப்துல் கறீம், அதிராம்பட்டினம், சென்னை *1982,* பக்கம் *302)* மகாவித்துவான் பதுறுத்தீன் புலவர்கள் இயற்றிய முகியித்தீன் புராணத்தை *1983*இல் பதிப்பித்த பேராசிரியர் மு.அப்துல் கறீம் அதன் முதல் தொகுதி பக்கம் *472*இல் முகியித்தீன்– இறை நெறிக்குப்புத்துயிரூட்டியவர் என்று பொருள் தந்துள்ளார்.

குணங்குடி மஸ்தான் - மா. வடிவேலு முதலியார்

இறைநேசச் செல்வரான குணங்குடி மஸ்தான் கி.பி. *1792* ஹிஜ்ரி *1207* – கி.பி. *1838) 1079* ஞானப் பாடல்கள் பாடியுள்ளார். அதில் *118* பாடல்களில் முகியித்தீனே, என்ற திருநாமத்தை சொல்லியுள்ளார். முதல் பாடல் குருவணக்கம் துவங்கி **ஆநந்தப்பத்து** *11* பாடல்கள் **முகியித்தீன் சதகம்** *103* பாடல்கள் முகியித்தீன் ஆண்டவர் கொச்சகம் பாடல்கள் நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களில் முகியித்தீனே என்று மனமுருகிப் பாடியுள்ளார். ஹு பிஸ்மில்லாகி அலாநியத்தி சுல்தான் அப்துல்காதிறு லெப்பை ஆலீம் ஆரிபுபுல்லா சாகிபு ஒலியுல்லா என்னும் இயற்பெயருடைய குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்கள் பாடல் இஃது. சென்னை தொண்டை மண்டலம் கல்விச்சாலை பிரதம தமிழ்ப்பண்டிதர் வித்வான் சூ.அப்பன் செட்டியார் அவர்கள் மாணக்கர் **மா. வடிவேலு முதலியார்** எழுதின பொழிப்புரையுடன் பூவிருந்தவல்லி துளசிங்க முதலியார் சன்ஸ் அவர்களாற்றமது சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. *1908* விலை ரூபாய் இரண்டு. நூல் பக்கங்கள் *451.* அந்தக் காலத்தில் நிலவிய சமயப்பொறைக்கு இதைவிடச் சான்று வேண்டுமா? அண்மையில் முனைவர் கே. இரா. கமலா முருகன் குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள் மூலமும் உரையும் என்று 2016இல் 514 பக்கங்களில் வெளியிட்டுள்ளது சமயப்பொறைக்கு மற்றுமொரு சான்றல்லவா!

கவிக்கோ அப்துல் ரகுமான் - அப்துல் ரஷீத்

குணங்குடி மஸ்தான் பாடல்களுக்கு கவிக்கோ அப்துல் ரகுமானும், அப்துல் ரஷீதும் உரை எழுதுவது வியப்பில்லை.

இட்டா, கன்னைய்ய நாயுடு

திருநெல்வேலி ஜில்லா செவ்வல் மாநகரம் மகாவித்துவான் எம்.ஏ. நெயினா முகம்மதுப் பாவலர்களால் நன்கு பிழையறப்பரிசோதித்து **இட்டா கன்னைய்ய நாயுடு** *அவர்களால் சென்னை தனியாம்பாள் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்ட குணங்குடி மஸ்தான் திருப்பாடற்றிரட்டு மூலமும் பதவுரையும் எழுதியவர் யார் தெரியுமா?*

இராமஸ்வாமி நாயுடு

பிரபன்ன வித்துவான் காஞ்சிபுரம் மாகஸ்ரீஸ்ரீ இராமஸ்வாமி நாயுடு அவர்கள் தான்.

சமய ஒருமைப்பாடு

முகயதீன் சதகம் 89வது திருப்பாடலில் சில வரிகள்

தீதுமத பேதங்களற்றுமேயெங்குமிது
செல்வதுவும் எக்காலமோ
சாதிவரையற்ற குருநாதனே முத்திநிலை
திருவதினி எக்காலமோ

என்று சமய ஒருமைப்பாட்டிற்கு குரல் கொடுத்தவர் குணங்குடி மஸ்தான் தான் அவர் பாடல்களில் அதிகம் ஒலிக்கும் சொல் முகியித்தீனே.

ஹஸ்ரத் ஷெய்கு அப்துல் காதிர் ஜிலானி

ஹிஜ்ரி 470 இல் 19.3.1078 தோன்றியவர்கள் ஹஸ்ரத் ஷெய்க் அப்துல் காதிர் ஜிலானி. தந்தை சையது அபுஸாலிஹ் இப்னு மூசா. தாயார் உம்முல் கைர் (அ) அமத்துல் ஜப்பார் பாத்திமா பாக்தாத்தில் கல்வி பயின்றார்கள். பத்ஹூர் ரப்பாணி என்ற 68 சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள். ஹிஜ்ரி 561இல் இறையடி சேர்ந்தார்கள். (கி.பி. 1165)

தென்னகப் பயணம்

கி.பி. 1148இல் தமது பொறுப்புகளை ஹஸ்ரத் அப்துல் வஹாப் அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு, உலகின் பல பகுதிகளுக்கும்

சென்று மார்க்கப் பிரச்சாரம் செய்தார்கள். தென்னிந்தியா, இலங்கை, மாலத்தீவு என அவர்கள் பயணத்தின்போது பொட்டல்புதூர் வழியாகத்தங்கி, தொழுது சென்றார்கள் என்று டாக்டர் சௌ. மதார் முகைதீன் தனது முகைதீன் ஆண்டகை (ரஹ்) வரலாறு நூலில் 2002 பக்கம் 45இல் கூறியுள்ளார்கள்.

'முகைதீன் பதவி'

ஹஸ்ரத் அப்துல் காதிர் ஜிலானிக்கு 'முஹ்யுத்தீன் முகையதீன்' (முகைதீன் – தீனுக்கு உயிர் கொடுப்பவர்) என்ற பட்டம் கிடைத்தது.

ஆர்.பி.எம். கனி

முஹ்யத்தீன் ஆண்டகை சரித்திரத்தை கௌதுல் அஃலம் (மகாவலுப்பம் உளள் பாதுகாவலர்) என்று நான்கு பாகங்களில் வெளியிட்டவர் ஆர்.பி.எம். கனி மாபெரும் தவசீலர் முஹ்யித்தீன் ஆண்டகை என்று இது பின்னர் நான்கு பாகங்களாக வெளிவந்தது. மஹ்பூப் சுப்ஹானி, குத்பே – ரப்பானி, கௌது ஸமதானி, நூருல் ஐனி என்ற பெயர்களும் ஆண்டகை தமிழகத்தில் முஹியித்தீன் ஆண்டகை என்றும் மக்களால் அழைக்கப்பட்ட வலிமார்களின் தலைவர் முஹ்யித்தீன் ஆண்டகை அவர்களது திருப்பெயரைத் தாங்கியவர் முன்மாதிர் ஆசிரியர் முகைதீன் பிச்சை.

பி.எஸ்.கே. முஹம்மது இப்ராஹிம் பாக்கவி

கண்ணியத்திற்குரிய பன்னூல் ஆசிரியர் உத்தமபாளையம் அல்ஹாஜ் பி.எஸ்கே. முஹம்மது இப்ராஹிம் பாக்கவி அன்வாருல்லாஹ் சிஷ்தியுல் காதிரி (நபிகள் நாயகம் அண்ணல் (ஸல்) அவர்களை கனவில் கண்டவர்கள் வலிகள் கோமான் முஹ்யித்தீன் ஆண்டகை வாழ்க்கை வரலாறு நூலைத் தந்துள்ளார்கள். அதன் மூன்றாவது பதிப்பு 2014இல் 184 பக்கங்களில் வெளிவந்துள்ளது. அந்த நூலில் பல விவரங்களை அறிந்து கொள்ளலாம்.

Mohiuddin

Later on he gained the title of Mohiuddin that is Reviver of Religion, (Saiyed Abdus salik saiyedena Hazrat Ghaus-ul-Azam, Calcutta, 1939 (Price Rs. 2 Book Totaly 168+15=183) page 5. வலிகளின்

கோமானுக்கு முகியித்தீன் என்ற பட்டம் கிடைத்ததை வரலாற்று ரீதியாக அனைவரும் ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

சேகனாப் புலவர்

கி.பி.1807 இல் சேகனாப் புலவர் முகையத்தீன் புராணம் பாடியுள்ளார்.

வண்ணக்களஞ்சியப் புலவர்

1810இல் புலவர் நாயகம் பாடிய குத்புநாயகம், வண்ணக் களஞ்சியப் புலவர் கி.பி.1814இல் முகையத்தீன் புராணம் பாடியுள்ளார்.

பதுருத்தீன் புலவர்

கி.பி.1816இல் யாழ்ப்பாணம் பத்ருத்தீன் புலவர் முகையத்தீன் புராணம் பாடியுள்ளார்.

கி.பி. 1855 காலாங்குடியிருப்பு ஐதுரூசு நயினார்ப் புலவர் பாடிய நவமணிமாலை.

கி.பி. 1861இல் பக்கீர் மதார் புலவர், நைனார் முகம்மதுப் புலவர் தந்த முஹியித்தீன்மாலை.

1878 அல்லி மரைக்காயர் பாடிய முகைதீன் அப்துல் காதிர் ஆண்டவர் பேரில் பதிற்றந்தாதி.

கி.பி. 1890இல் உமறு அசன் நயினார் கலிபா புலவர் பாடிய முகையதீன் ஆண்டவர் பேரில் திருப்புகழ்.

1893 ஈழத்து அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் பாடிய முகைதீன் ஆண்டகை காரணப் பிள்ளைத்தமிழ்.

1895இல் முகியித்தீன் அப்துல் காதிறு ஜெயிலானி ஆண்டவர் புராணம் பிள்ளைத்தமிழ் பாடிய அ.பி.ப. அப்துல் காதிறு.

1895இல் முகையதீன் ஆண்டவர் பெயரில் பதிகம் பாடிய செய்கப்துல் காதர் நைனார் லெப்பை ஆலிம்.

1899 முஹியித்தீன் அப்துல் காதிறு ஜெயிலானி அவர்கள் பேரில் பேரின்ப ரஞ்சித மாலை ஆர்.பி. அருள்வாக்கி அப்துல் காதிறு.

கி.பி. 1899 முஹியித்தீன் புகழ் பாடிய மேலப்பாளையம் காளை ஹசனலிப்புலவர்.

கி.பி. 1899 எம்.பி. சின்ன கனி லெப்பை பாடிய முஹையதீன் முனாஜத்து.

கி.பி. 1901 உமறு அசனயினாப்புலவர் பாடிய முகியித்தீன் ஆண்டகை பேரில் திருப்புகழ்.

கி.பி. 1906 காதிறு முகியித்தீன் மஸ்தான் சாகிபு பாடிய முகியுத்தீன் ஆண்டவரவர்கள் தத்துவநிலை.

கி.பி. 1911 பக்கீர் காதர் புலவர் பாடிய முகைதீன் மாலை

கி.பி. 1912 பட்டாணி முகம்மது அபுபக்கரின் நவரத்ன அலங்காரக் கீர்த்தனம்

கி.பி. 1914 ஷெய்கு அப்துல் காதரு நயினார் லெப்பை ஆலிம் பாடிய முகைதீன் ஆண்டகை தோத்திரம்.

கி.பி. 1917 முகம்மது கிர்கிரி பாடிய முஹியுதீன் மாலா.

கி.பி. 1918 முகம்மது ராவுத்தர் பாடிய முஹிதீன் மாலை.

கி.பி. 1918 செ.மு. முகம்மது ஹனிபா பாடிய முஹ்தீன் மாலை.

கி.பி. 1923 அபுசாலி பாடிய முகையதீன் ஆண்டவர் பேரில் முனாஜாத்து.

கி.பி. 1923 காளை ஹசனனலிப் புலவர் முஹியித்தீன் ஆண்டவர்கள் காரண சரித்திரம்.

கி.பி. 1926 ஷாகுல் ஹமீது புலவர் பாடிய முகியித்தீனாண்டகை பேரில் தாய் மகளேசல், முஹியித்தீன் ஆண்டகையவர்கள் பேரில் நவநீத புஞ்சம்.

கி.பி. 1926இல் செய்யது முகியித்தீன் கவிராஜர் பாடிய முகியதீன் ஆண்டவர் பேரில் திருப்புகழ்.

முகியிதீன் ஆண்டவர் பேரில் பிள்ளைத்தமிழ்

அகமது லெப்பை ஆலிம் பாடிய முகைதீன் ஆண்டவர்கள் பேரில் தாய் மகள் ஏசல்.

அப்துல் காதிர் பாடிய முகையதீன் சதகம்.

கண்ணகுமது மகுதூம் முகம்மதுப் புலவர் பாடிய முகைதீன் ஆண்டவர்கள் பேரில் சந்தக்களித்திருப்புகழ்.

நயினா முகம்மதுப் புலவரின் முகையதீன் மாலை.

கி.பி. *1942* கோட்டாறு செய்யிது முஹம்மது பாடிய முஹியித்தீன் மாலை.

முகைதீன் ஆண்டகை புகழ்பாடிடும் இஸ்லாமிய இலக்கிய நூல்கள் நூற்றுக்கணக்கில் அடியேனது நினைவிற்கு வந்ததை எழுதிப்பார்த்தேன் அவ்வளவுதான்!

வண்ணக்களஞ்சியப்புலவர்

முஹ்யித்தீன் என்று சொல்ல முன்னவன் கருணையுண்டாம்
முஹ்யித்தீன் என்று சொல்ல முஸீபத்தும் பலாயும்* நீங்கும்
முஹ்யித்தீன் என்று சொல்ல முத்தொகை உலகும் வாழ்த்தும்
முஹ்யித்தீன் என்ற சொல்ல முடிவிலாப் பதவியுண்டாம்**

1745 - 1808 ஜவாது புலவர்

அருமைச் சகோதரர் ஈரோடு கு.ஜமால் முஹமதுவின் பாட்டனார் சேதுகவி ஜவாது புலவர் பாடியது. அவர்கள் முஹ்யித்தீன் ஆண்டகை பிள்ளைத் தமிழ் பாடியுள்ளார்கள்.

உமறுப் புலவர்

சீறாப்புராணத்தில் உமறுப்புலவர்

உரமுறுதீன்பாரெல்லாம் ஒளிரவே விளக்கம் செய்தோர்
துரமுறு அவுலியாவாய்த்* துலங்கின பேர்க்கு மேலாம்**
வரமுறு முஹ்யித்தீன் செம் மலரடி இரண்டும் எந்தன்
சிரமிசை யிருத்தி வாழ்த்திச் செந்தமிழ்ப்பனுவல் செய்தேன்

என்று முஹ்யித்தீன் ஆண்டகை புகழ் பாடியுள்ளார்.

இஷாத் தொழுகை

உலகில் மிக்கப் புகழ்பெற்ற கீர்த்தியும் நேர்த்தியும் நிறைந்த வலிமார்களின் தலைவர் முகைதீன் ஆண்டகை மறைவைப்பற்றிய வரலாற்றுக் குறிப்பை நோக்கினேன்.

* முஸீபத்து – கேடு, பலாய் – கேடு

** வண்ணக்களஞ்சியப் புலவர் குத்பு நாயகத்தில் பாடியது இது.

*** அவுலியா – இறை நேசச் செல்வர்.

ஹிஜ்ரி 561 (கி.பி. 1166)

முஹ்யித்தீன் ஆண்டகை குளித்தார்கள். இஷாத் தொழுகையை (இரவு சுமார் 8 மணி அளவில் நிறைவேற்றும் அன்றையப்பொழுதின் நிறைவுத் தொழுகை) தொழுதார்கள். அதன்பின் நீண்ட நேரம் ஸஜ்தா (தரையில் நெற்றிப்படும் நிலையில் இறைவனை வணங்குதல்) செய்தார்கள். அப்போது திருகுர்ஆன் வசனங்கள் அசரீரியாக ஒலித்தன.

தித்திக்கும் திருமுறை - விடியற்காலை

தித்திக்கும் திருமறையாம் திருகுர்ஆனில் 89வது அத்தியாயம் அல்ஃபஜ்ர் (விடியற்காலை) அதில் 27, 28, 29, 30 வசனங்கள் இதோ;

அல்லாஹ்வின் கட்டளைகளை உண்மைப்படுத்துவது கொண்டு அமைதி பெற்ற ஆத்மாவே!

நீ உன் இரட்சகன் பக்கம் அவனைத் திருப்தியடைந்த நிலையிலும்

அவனிடம் பொருந்திக் கொள்ளப்பட்ட நிலையிலும் மீள்வாயாக!

நீ எனது அடியார்களான நல்லோர்களின் கூட்டங்களிலே பிரவேசிப்பாயாக!

மேலும் என்னுடைய சுவனத்தில் நீ நுழைந்துவிடுவாயாக! (என்று அல்லாஹ் கூறுகிறான்)

யூனுஸ்

திருமறையாம் அருமறை திருகுர்ஆனில் 10வது அத்தியாயம் 'யூனுஸ்' அதில் 62, 63, 64 வசனங்கள் அவர்களது நினைவிற்கு வந்தது.

'விசுவாசிகளே! அறிந்து கொள்ளுங்கள் அல்லாஹ்வின் நேசர்கள் அவர்களுக்கு யாதொரு பயமுமில்லை, அவர்கள் கவலையும் அடையமாட்டார்கள்' அவர்கள் எத்தகையோரென்றால் அல்லாஹ்வை உண்மையாகவே விசுவாசித்து அவனைப் பயந்தவர்களாகவும் இருப்பார்கள். அவர்களுக்கு இவ்வுலக வாழ்விலும் மறுமையிலும் நன்மாராயமுண்டு அல்லாஹ்வுடைய வாக்குறுதியில் எவ்வித மாற்றமுமில்லை. இதுவே மகத்தான வெற்றியாகும்.

ஹிஜ்ரி 561 ரபியுல் ஆகிர் பிறை பதினொன்றில் (கி.பி. 1166) இஷாத் தொழுகை முடித்து நீண்ட நேரம் ஸஜ்தா செய்தார்கள். அதன்பின் இவ்வுலக வாழ்வைத்துறந்தார்கள். (ஆர்.பி.எம். கனி, மாபெரும் தவசீலர் முஹ்யித்தீன் ஆண்டகை முதல் பாகம் முதற்பதிப்பு 1954, எட்டாம் பதிப்பு 2005 சென்னை, பக்கம் 70)

கரீம் கனி

இரங்கூனில் உதய சூரியன் பிரசுராலயம் 4 அணா விலையில் ஜனாப் கரீம் கனி அவர்களால் எழுதப்பெற்று ஜெவஹர் பிரசுரம் நெம்பர் 4 ஆக வெளிவந்த நூல் முஹிய்யித்தீன் மான்மியம் (ஹஸ்ரத் அப்துல்காதிரி ஜிலானி (ரலி) ஆண்டகையின் ஜீவிய சரிதை 75 பக்ககங்களைக் கொண்ட அந்த நூலில் பக்கம் 71, 72இல் முஹ்யித்தீன் ஆண்டகை இஷா தொழுத பின் நீண்ட நேரம் சஜ்தாவிலிருந்து 'துஆ' (பிரார்த்தனை) செய்து கொண்டிருந்தார்கள். லாயிலாஹ இல்லல்லாஹூ முஹம்மதுர் ரஸுலுல்லாஹ் என்றும் கலிமாவை ஓதிக்கொண்டிருந்தார்கள். அல்லாஹ் என்று அழைத்தவர்களாக தங்களின் தொன்னூற்றி ஒன்றாம் பிராயத்தில் விண்ணுலகெய்தினார்கள்.

இந்த சரித்திரம் எளியேனுக்கு நினைவிற்கு வந்தது. எதற்கு என்பதை முடிவில் தெரிந்து கொள்வீர்கள்.

முன்மாதிரி ஆசிரியர் முகைதீன் பிச்சை

குடும்பச் சூழல் காரணமாக பூலாங்குடியிப்பில் இருந்து 5 கி.மீ. தூரமுள்ள செங்கோட்டை விசுவநாதபுரத்திற்கு குடிபெயர்ந்தார் நா. செய்யது மசூது. அவரது மூன்றாவது புதல்வரான முகைதீன் பிச்சை அவ்வூரில் உள்ள எம்.எம். நடுநிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை பயின்றார்.

எஸ்.எம்.எஸ்.எஸ். உயர்நிலைப்பள்ளி

செங்கோட்டை எஸ்.எம்.எஸ்.எஸ். உயர்நிலைப்பள்ளியில் 11வது வகுப்பு வரை படித்தார்

ம.தி.தா. இந்துக் கல்லூரி

திருநெல்வேலி பேட்டை மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக்கல்லூரியில் புதுமுக வகுப்பும் (பியூசி) பின்னர் பி.ஏ.

பொருளாதாரமும் பயின்றார். பின்னர் பி.எட். பட்டம் பெற்றார். அதன்பின் எம்.ஏ. பட்டம் பெற்றார். எம்.ஏ., பி.எட். படித்த நிலையில் பணி வாய்ப்புக்காக முயற்சித்தார்.

கடையநல்லூர் மசூதுதைக்கா உயர்நிலைப்பள்ளி

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் மசூதுதைக்கா உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியர் பணி கிடைத்தது. அங்கு தமிழாசிரியராகப் பணியில் சேர்ந்தார்.

அப்துல்லா பீவி

அந்தப் பள்ளியில் பணியாற்றிய கணித ஆசிரியை அப்துல்லா பீவியைத் திருமணம் செய்தார். கல்விப்பணி தொடர்ந்தது. இல்லற வாழ்வு சிறப்புடன் அமைந்தது. இரண்டு பெண் மக்களும் (சல்மா, பாத்திமா) ஒரு மகனும் (சலீம்) பிறந்தார்கள்.

இறை நாட்டம்

இஸ்லாமிய மார்க்கத்தின் மீது ஈடுஇணையற்ற அன்பு கொண்டு மார்க்கப் பிரச்சாரப் பணியில் ஈடுபட்டார். அவரது மூச்சே மார்க்கமாய் இருந்தது.

ஆசிரியப் பணி - ஆன்மீகப் பணி - இரு கண்கள்

ஆசிரியப் பணி நடைபெறும் ஓய்வு நாட்கள், விடுமுறை நாட்களில் ஆன்மீகப் ப்ணி தொடரும்.

அயல்நாடுகளில் தப்லீக்

மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, இந்தோனேசியா, பாகிஸ்தான், தென் ஆப்பிரிக்கா இப்படி பல நாடுகளுக்கு மார்க்கப் பிரச்சாரத்திற்குச் சென்றார் முகைதீன் பிச்சை. எப்போதும் அல்லாஹ்வின் திருநாமம் அவரது வாயில் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

ஆசிரியர் பணி ஓய்வு

ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார். ஆன்மீகப்பணியிலிருந்து ஓய்வு பெற்றார் இல்லை. அனுதினமும் அயராது பாடுபட்டார். அனைவரிடமும் அன்பைப் பொழிந்தார்.

இருபத்தி ஐந்து இலட்சம் நன்கொடை

செங்கோட்டை விசுவநாதபுரம் பள்ளிவாசலை விரிவுபடுத்தியபோது பள்ளிவாசலை ஒட்டியிருந்த அவரது சுமார் 15 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பள்ளிவாசல் மேற்புரம் உள்ள இடத்தை நன்கொடையாகவே தந்தார் அது மட்டுமா?

அந்தப் பள்ளிவாசலில் அரபிப்பாடசாலை அமைய பள்ளிவாசலின் வடபுறமுள்ள அவரது 10 இலட்ச ரூபாய் மதிப்புள்ள இடத்தை நன்கொடையாக மீண்டும் தந்தார். செங்கோட்டை விசுவநாதபுரம் பள்ளிவாசலுக்கு மட்டும் அவர் தந்த நன்கொடை நிலத்தின் மதிப்பு 25 இலட்ச ரூபாய். அன்று அந்தப் பள்ளிவாசலில் அவர் ஆற்றிய ஜிம்ஆ உரை எளியேனின் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

நா.செய்யது மசூது – காசினம்மாள் பீவி

உதவி - உதவி - உதவி

ஏழை எளியவர்கள் உறவினர்கள் வறுமையில் வாடுபவர்கள் இவர்களைத் தேடிச் சென்று நாடிச்சென்று உதவுபவர் முன்மாதிரி ஆசிரியர் முகைதீன் பிச்சை.

67வது வயது

2020 ஜுலை 30 தனது 67வது வயது சிறிது உடல்நலக்குறைவு மருத்துவமனைக்கு செல்ல அழைக்கிறார்கள். **இன்று வியாழக்கிழமை அதாவது வெள்ளிக்கிழமை இரவு இஷா தொழுதுவிட்டு செல்வோம் என்கிறார்.**

மார்க்கமே மூச்சாய் - இஷாத் தொழுகை

இஷாத் தொழுகையை முடித்துவிட்டு, நடந்தேவந்து வாகனத்தில் 'அல்லாஹூ அக்பர்' என்று ஏறுகிறார் மணி இரவு 8.20. கடையநல்லூரிலிருந்து கார் நெல்லையை நோக்கி கிளம்புகிறது. கௌதுல் ஆலம் முஹ்யித்தீன் ஆண்டகையும் இஷாத் தொழுகையை நிறைவு செய்த பின்னரே இவ்வுலக வாழ்வைத் துறந்தார்கள். அந்த பெரும்பேறு என் அண்ணனுக்கும் கிடைத்தது. எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கிருபையன்றோ!

கொடிக்குறிச்சி

20 நிமிடங்கள் கழிந்தது கொடிக்குறிச்சி அருகே வந்ததும் ஏதோ செய்கிறது என்கிறார். அப்படியே சாய்ந்தார். தனது வாழ்க்கைத் துணைவியாரின் கரங்களை அழுத்திப் பிடிக்கிறார். மாரடைப்பால் இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டு இறைவனிடம் சென்றுவிட்டார். (இன்னாலில்லாஹி)

திரளான மக்கள் கூட்டம்

30.7.2020 இரவு 12.30 மணி அளவில் நல்லடக்கம் செய்யப்பட்டார். நள்ளிரவு வேளையிலும் திரளான முஸ்லிம் சகோதரர்கள் திரண்டிருந்து அன்னாருக்காக ஜனாஸா தொழுகையை நடத்தினார்கள்.

அன்னார் நினைவாக அடியேனிடம் உள்ள பல கடிதங்களில் ஒன்று இதோ;


14/12/93
Dear brother.


पते में पिन कोड लिखिए
WRITE PIN CODE IN ADDRESS
भारत
INDIA
To
पिन PIN 627002

இறையருட் கவிமணி கா. அப்துல் கபூர்

பேராசிரியர் தமிழ்ச் செம்மல் இறையருட் கவிமணி கா. அப்துல் கபூர் பல நூல்கள் யாத்தவர் அவர் பாடிய மும்மணி மாலையிலிருந்து சில பாடல்கள்

அருளும் அன்பும் நிறைந்தோனாம்
ஆதிபெரியோன் அல்லாவின்
பெருகும் ஞானச் சுடரொளியின்
பெயரேகுத்பு முஹ்யித்தீன்

ஞாலம் போற்றும் அறிவுபெற
நாடி வந்த மாணவர்க்கு
காலவானில் தாரகையாம்
கல்வி புகட்டும் முஹ்யித்தீன்

செயலில் நலிந்து மெலிவுற்று
செம்மை இஸ்லாம் நெறியோங்க
உயர்வாம் மருந்தால் உயிரூட்டும்
உரியமருத்துவர் முஹ்யித்தீன்

மனைவி நலனைப் பேணிடுதல்
மழலைக் குழவிக்கின்புறுதல்
மனையின் வினைகள் ஆற்றிடுதல்
மகிழ்ந்தே செய்தார் முஹ்யித்தீன்

கல்லுங்கசியக் கனிந்துரைத்து
கருத்துக்கரிய விருந்தூட்டும்
சொல்லும் செயலும் மாறாத
சோபை இலங்கும் முஹ்யித்தீன்

அல்லா அவனை அஞ்சிடுக
அவன்பால் தேவைமுறையிடுக
எல்லாமவனே எனமகற்கு
இறுதியுரைத்தார் முஹ்யித்தீன்

அல்லின் தொழுகை முடித்தார்கள்
அழகாய்க் கலிமா நவின்றார்கள்
'அல்லா' வென்றார் மும்முறைகள்
ஆவி துறந்தார் முஹ்யித்தீன்.

ஞானப் பெருங்கடல் வலிமார்களின் அரசர் கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் குறித்து மும்மணிமாலையில் பேராசிரியர் கா. அப்துல் கபூர் பாடிய வரிகள் எளியேனின் காதில் இப்போது மீண்டும் ஒலிக்கிறது.

தமிழகத்தில் 12,000 பள்ளிவாசல்கள் முஹ்யித்தீன் ஆண்டகை பெயரால். நெல்லை, குமரி, தூத்துக்குடியில் மட்டும் 2,000 பள்ளிவாசல்கள். முகைதீன் என்ற பேர் கொண்டவர்கள் இல்லாத முஸ்லிம் ஊர் இருக்கவே முடியாது.

அந்த அளவிற்கு அகிலம் போற்றிய அவர்களது திருப்பெயர் தாங்கிய அண்ணன் செ. முகைதீன் பிச்சை அன்றும் இன்றும் என்றும் எங்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டிருப்பார். அன்னாரின் மஃபிரத்திற்காகவும் மறுமை மேன்மைக்காகவும் துஆ செய்ய வேண்டுகிறேன்.

செ. திவான்

ரெகான்
சுலைமான்
பதிப்பகம்

ஞாலம் போற்றும் அறிவுபெற
நாடி வந்த மாணவர்க்கு
காலவானில் தாரகையாம்
கல்வி புகட்டும் முஹ்யித்தீன்

செயலில் நலிந்து மெலிவுற்று
செம்மை இஸ்லாம் நெறியோங்க
உயர்வாம் மருந்தால் உயிரூட்டும்
உரியமருத்துவர் முஹ்யித்தீன்

மனைவி நலனைப் பேணிடுதல்
மழலைக் குழவிக்கின்புறுதல்
மனையின் வினைகள் ஆற்றிடுதல்
மகிழ்ந்தே செய்தார் முஹ்யித்தீன்

அல்லா அவனை அஞ்சிடுக
அவன்பால் தேவைமுறையிடுக
எல்லாமவனே எனமகற்கு
இறுதியுரைத்தார் முஹ்யித்தீன்

அல்லின் தொழுகை முடித்தார்கள்
அழகாய்க் கலிமா நவின்றார்கள்
'அல்லா' வென்றார் மும்முறைகள்
ஆவி துறந்தார் முஹ்யித்தீன்

பேராசிரியர் கா. அப்துல் கபூர்
மும்மணிமாலையில்